உழைப்பு தொழிலாளர் திட்டம் உருவாக்க 1994-ல் ஆணையிட்டார்கள். விபத்து காப்பீட்டுத் திட்டம், வைப்பு நிதி, இ.எஸ்.ஐ., குழந்தைகள் காப்பகங்கள், போன்ற நலத் திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இந்தத் திட்டம் சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளுக்கு தற்போது அமல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 19,722 கட்டிடத் தொழிலாளர்கள் ரூபாய் 25 செலுத்தி பதிவு செய்துள்ளனர். அவர்களுக்கு இன்சூரன்ஸ் செய்யப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டுபவர்கள் கட்டுமானப் பணியின் மொத்தச் செலவினை. 1 சதவீதம் தொழிலாளர் நல நிதிக்குச் செலுத்த வேண்டும். அப்படித்தான் அந்தத் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கின்ற திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 93, திரு.ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

93—

சிறுதொழில் கடன் தொகையைக் கூடுதலாக்குதல்

108111—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிலவள வங்கிகள் பண்ணைசாரா திட்டத்தின்கீழ் சிறுதொழில் தொடங்க வழங்கப்படும் கடன் தொகையை கூடுதலாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

கூட்டுறவு நிலவள வங்கிகளில் பண்ணைசாரா கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் அதாவது நான் பார்ம் செக்டார் லோன் சிறு தொழில் தொடங்க தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் (நபார்ட்) விதிமுறைகளுக்குட்பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன. அந்த நபார்ட் எந்தெந்த காலகட்டங்களிலே விதிமுறைகளைத் தளர்த்தி கடன் தொகைகளை அதிகரிக்கலாம் என்று உத்தரவிடுகிறதோ, அந்தக் காலகட்டங்களில் எல்லாம் இந்தக் கடன்கள் அதிகமாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பண்ணைசாரா திட்டத்தின்கீழ் குறைந்தபட்சம்

கடன் எவ்வளவு கொடுக்கப்படுகிறது. அதிகபட்சம் கடன் எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பண்ணைசாரா கடன்களில் குறைந்தபட்சமாக கடன் தொகை ஆரம்பத்தில் 30,000 ஆகவும், அதிகபட்ச கடன் தொகையாக ஆரம்பத்தில் 5 இலட்சம் ஆகவும் இருந்தது. அதற்குப் பின்னாலே, குறைந்தபட்ச கடன் தொகை ரூ. 50,000-மாக உயர்த்தப்பட்டு, அதிகபட்ச கடன்தொகை ரூ.7½ இலட்சமாக உயர்த்தப்பட்டது. தற்போது அதிகபட்ச கடன் தொகை ரூ. 10 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.50

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இதுவரையில் பண்ணைசாரா திட்டத்தின் கீழ் எவ்வளவு பேருக்கு கடன் கொடுக்கப்பட்டுள்ளது? பண்ணைசாரா திட்டத்தின் கீழ் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் என்னென்ன சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்றுக்கொண்ட பின்னாலே 1991-92-ல் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 3.69 கோடி ரூபாயும், அதே மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக 1992-93-ல் 7.96 கோடி ரூபாயும், 1993-94-ல் 11.85 கோடி ரூபாயும், 1994-95-ல் 20.61 கோடி ரூபாயும் 1995-96-ல் ஜனவரி மாதம் 1996 வரையில் 14.48 கோடி ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது. இது மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக மட்டும் வழங்கப்பட்ட கடன். அப்படியே நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 1991-92ல் 20.24 கோடி ரூபாயும், 1992-93-ல் 24.26 கோடி ரூபாயும், 1993-94ல் 29.89 கோடி ரூபாயும், 1994-95-ல் 33.73 கோடி ரூபாயும், 1995-96 ஜனவரி 1996 வரையிலே 32.37 கோடி ரூபாயும், வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகைகள் நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக மட்டும் வழங்கப்பட்டிருக்கின்றன. அப்படியே நிலவள வங்கிகள் மூலமாக 1991-92-ல் 3.84 கோடி ரூபாயும், 1992-93-ல் 15.52 கோடி ரூபாயும், 1993-94-ல் 40.06 கோடி ரூபாயும், 1994-95-ல் 51.32 கோடி ரூபாயும், 1995-96 ஜனவரி முடிய 36.87 கோடி ரூபாயும், வழங்கப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள்

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னாலே இந்தப் பண்ணைசாரா கடன்களுக்கு என்ன சலுகைகள் அளித்திருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இதுவரையில் கடன்கள் கொடுக்கப்படுகின்ற அந்தப் பண்ணைசாரா கடன்கள் 10 இலட்சம் ரூபாய் வரையிலே கடன் பெற முடியும். புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னாலே 1995-ஆவது வருஷம் 11-ஆவது மாதம் 10 இலட்சம் வரையிலே கடன் வாங்குபவர்களுக்கு இந்த ஸ்டாம்ப் டியூட்டியிலிருந்து விலக்கு அளித்து 100 ரூபாய்க்கு 3 ரூபாய் ஸ்டாம்ப் டியூட்டி கட்ட வேண்டும் என்கின்ற அந்த அடிப்படையில் அவர்கள் ரத்து செய்து இன்றைக்கு கடன் பெறுபவர்கள் எந்தவிதமான செலவும் இல்லாமல் கடன் பெறுகின்ற அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 94, திரு. சஞ்சய் ராமசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

94—

புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்குதல்

***35962**—திரு. சஞ்சய் ராமசாமி:*

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராசர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, விருதுநகர் தொகுதிக்குட்பட்ட பஞ்சாயத்துக்களை உள்ளடக்கி புதிய ஊராட்சி ஒன்றியம் ஒன்றை உருவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உருவாக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காமராசர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து விருதுநகர் தொகுதிக்குட்பட்ட பஞ்சாயத்துக்களை உள்ளடக்கி புதிய ஊராட்சி ஒன்றியம் ஒன்றை உருவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.